**கவனிக்க.-** *2022.05.13 ஆந் திகதிய 2280 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ), பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *2022.05.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் 2022 ஆம் ஆண்டுக்கான யூரிமார்களின் பெயர்ப்பட்டியலொன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.* -


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2281 - 2022 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2022.05.20

*2281 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 756 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


755 - B 082347 - 5423 (2022/05)

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர்: கன்ட்றீ கிச்சன் கொன்பெக்ஷனெரி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்
கிளை : அம்பலங்கொடை

மேற்படி தீர்மானமானது 2021.02.25 ஆந் திகதி 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தரான" கன்ட்றீ கிச்சன் கொன்பெக்ஷனெரி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிக் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு D. D. J. S. மாயாதுன்னே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 06.05.2015 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 743 மற்றும் 06.04.2016 ஆந் திகதிய மேலதிக ஈட்டுமுறி இல. 1012 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால் :

பேன் ஏசியா பேங்கிக் கோப்பரேஷன் பீஎல்சீ க்கு (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) சொல்லப்பட்ட ஈட்டுமுறி இல. 743 மற்றும் 1012 ஆகிய ஈட்டு முறிகளுக்கு அமைய 04.02.2021 ஆந் திகதியில் இருந்து கொடுப்பனவு திகதி வரை ஐந்து மில்லியன் எட்டு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது ரூபா இருபது சதம் (ரூபா 5,877,859.20) கொண்ட பணத்தொகையையும் அதற்காக 05.02.2021 ஆந் திகதியிலிருந்து ரூபா 5,791,796.34 பணத்தொகைக்கு 17.5% வருடாந்த வட்டியுடனும் மற்றும் 04.02.2021 ஆந் திகதியில் இருந்து கொடுப்பனவு திகதி வரை ஆறு மில்லியன் மூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து ரூபா ஐம்பத்து இரண்டு சதம் (ரூபா 6,318,275.52) கொண்ட பணத்தொகையும் 05.02.2021 ஆந் திகதியிலிருந்து ரூபா 6,036,969.44 இற்கு 17.5% வருடாந்த வட்டியுடனான ரூபா 6,036,969.44 பணத்தொகையும், தற்பொது வர வேண்டியும், சேரவேண்டியுமுள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:-

பன்னிரெண்டு மில்லியன் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நூற்று முப்பத்து நான்கு ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூபா 12,196,134.72) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத்திகதிவரையான வட்டியுடனும்சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள "கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" கன்ட்றீ கிச்சன் கொன்பெக்ஷனெரி லங்கா (பிரைவேட்) லிமிடெட்டிற்கு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஈட்டு முறி இலக்கங்கள் 743 மற்றும் 1012 ஆகியவற்றின் ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3, (50/3) ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் துசித் கருணாரத்ன என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், (பலபிட்டிய பதிவு பிரிவிற்குள்), காலி மாவட்டம், வெல்லபொட பத்து, பலபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, பலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, ரன்தொம்பே ; தெற்கு : இல. 88/A, கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட, ரன்தொம்பேயில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "கலகவாவத்த மஹபரான் நெகனஹிர கெபெல்ல" எனும் காணி (உரிமம் பெற்ற நில அளவையாளர் C. T. த S மனுகுலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994, நவெம்பர் 08 ஆந் திகதிய வரைபட இல. 1026 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 1A, 1B மற்றும் 1 C இன் காணித்துண்டு 1. காணித்துண்டுகள் A, காணித்துண்டுகள் 02 மற்றும் காணித் துண்டு A இன் ஒன்றிணைக்கப்பட்ட மீளளவையாகும். உரிமம் பெற்ற நில அளவையாளர் M. தேஜசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014, மாச்சு 21 ஆந் திகதிய வரைபட இல. 1455 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என

அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு A இன் எல்லைகைளாவன - வடக்கு : விலக்கப்பட்ட காணித்துண்டு B மற்றும் பன்சலவத்த ; கிழக்கு : பன்சலவத்த; தெற்கு : காலி வீதி மற்றும் மேற்கு : விலக்கப்பட்ட காணித்துண்டு B மற்றும் காலி வீதி மற்றும் இக்காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 1455 இற்கு அமைய முப்பத்தெட்டு தசம் மூன்று எட்டு பேர்ச் (00ஏ.00றூ.38.38பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன், இக்காணியானது பலபிட்டிய காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D 49/ 109 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிக்கா ஹல்வதுர,
முகாமையாளர் - அறவீடுகள்.

05-129